I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.127/2021 நாள் : 29.01.2026 பி.சா.3– திரு. கந்தசாமி.</u>

குறுக்கு விசாரணை :–

பிரதிவாதியின் ஊர் கோவில்பட்டி அருகில் நாலாட்டின்புதூர். பிரதிவாதி ஊரிலிருந்து 10 கிமீ தள்ளி எங்கள் ஊர் உள்ளது. நான் கார் ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். நான் நிரந்தர ஓட்டுநராக இல்லை. அழைப்பு ஓட்டுநராக தொழில் செய்கிறேன். நான் புதிய தமிழகம் கட்சியில் கிளைச் செயலாளராக பதவியில் இருக்கிறேன். 1ம் வாதிக்கு 50 வயதிருக்கும். 2ம் வாதிக்கு சுமார் 25 வயதிருக்கும். 2ம் வாதிக்கு எந்த ஆண்டு திருமணம் முடிந்தது என்று எனக்குத் தெரியாது. 1ம் வாதிக்கு ஒரு ஆண் பிள்ளை, ஒரு பெண் பிள்ளை. 1, 2 வாதிகள் யார் யாருக்கு வட்டிக்கு பணம் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. அதுகுறித்து நான் விசாரணையும் செய்யவில்லை. பிரதிவாதி என் உறவினர். ஆனால் என்ன முறை என்று எனக்குத் தெரியாது. பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். வேறு யாரிடமாவது கடன் கேட்டாரா என்றால் எனக்குத் தெரியாது. வாதிகளிடமிருந்து வேறு யாருக்காவது கடன் வாங்கி கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. பொதுவாக கடன் கொடுக்கும் நபர் கடன் வாங்கும் நபருக்கு கடனை திருப்பி கொடுக்கும் வசதியிருப்பதாக தெரிந்த பிறகுதான் கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதியை வாதிகள் நேரில் பார்க்கவில்லை. என் பேச்சை கேட்டுத்தான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தார்கள். பொதுவாக கடன் கொடுப்பவர்கள், கடன் வாங்குபவர்களுக்கு சொத்து பத்திரம் உள்ளதா என்பதை தெரிந்து கொண்டுதான் கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான். கடனுக்காக பிரதிவாதி வாதிகளிடம் ஆதாரமாக எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. கடனுக்காக பிரதிவாதி பத்திரத்தில்

கையொப்பமிட்டு கொடுத்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தன் சொத்தை விற்பனை செய்வதற்காகத்தான் வா.சா.ஆ 1 ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்தார் என்றால் சரியல்ல. கிரைய முன் பணத்தை பெற்றுக் கொண்டு பின்னிட்டு பாக்கி பகுதித் தொகையையும் பெற்றுக் கொண்டுதான் வா.சா.ஆ 1ல் முதல் தாளின் பின்பகுதியில் பிரதிவாதியும், அவரது மகனும் மேற்குறிப்பு செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. தொகைகள் அனைத்தும் சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்றும், பிரதிவாதி என் உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கையொப்பமிட்டுக் கொடுத்த ஆவணத்தை வாதிகள் தவறாக பயன்படுத்தியதாக வாதிகளை நான் கேட்கவில்லை. போலீசிலும் புகார் கொடுக்கவில்லை. வா.சா.ஆ 1ல் நான் சாட்சி கையொப்பமிடவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.01.29 18:15:46 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.